**செ.வெ.எண்: 109** **நாள்: 20.11.2020**

## பத்திரிக்கைசெய்தி

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் (NADP) 2020–21 –ன்கீழ் நாட்டுக் கோழிவளர்ப்பின் மூலம் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தென்காசி மாவட்டத்தில் முதற்கட்டமாக 25 நபர்களுக்கு 1000 எண்ணம் கொண்ட நாட்டுக் கோழிபண்ணை அலகுகள் 50% மானியத்தில் அமைப்பதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்பட வேண்டிய பயனாளிகளின் தகுதிகள்–

1. கோழிவளர்ப்பில் ஆர்வம் மற்றும் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும் மற்றும் 1000 கோழிகள் வளர்ப்பதற்கு ஏதுவாக சொந்தமாக கோழிக் கொட்டகை அமைப்பதற்கு தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.
2. தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகள் குறைந்த பட்சம் ஏற்கனவே 2500 சதுரஅடி கொண்ட கோழிக்கொட்டகை அமைப்பதற்கு ஏதுவாக இடம் (ஒருகோழிக்கு 2.5 சதுரஅடி) வைத்திருப்போராக இருத்தல் வேண்டும்.
3. பயனாளிகள் கோழிகள் வளர்ப்பதற்கு தேவைப்படும் தீவனதட்டு மற்றும் தண்ணீர் குடவை ஆகியவற்றை அவராகவே கொள்முதல் செய்துகொள்ள வேண்டும்.
4. கிராம ஊராட்சியில் நிரந்தரமாக வசிப்பவர் தேர்வு செய்யப்படவேண்டும்.
5. விதவைகள், ஆதரவற்றோர், திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு இந்ததிட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.
6. கிராம ஊராட்சியைச் சேர்ந்த பயனாளிகளில் 30 சதவீதத்தினர் கட்டாயமாக ஆதி திராவிடர் / பழங்குடியினர் இனத்தை சேர்ந்தவர் தேர்வு செய்யப்படவேண்டும்.
7. முந்தைய நிதி ஆண்டுகளில் கோழி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் நாட்டுக் கோழிப்பண்ணை மற்றும் கறிக்கோழிப்பண்ணை திட்டங்களில் பயனடைந்தவராக இருக்ககூடாது.
8. தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகள் தொடாந்து மூன்று வருடம் நாட்டுக்கோழி பண்ணையினை செயல்படுத்த உறுதி வழங்க வேண்டும்.

மேலும் இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு 1000 நாட்டுக்கோழிகள் கொள்முதல் செய்வதற்கும், தீவனம் வாங்குவதற்கும் மற்றும் குஞ்சு பொறிப்பக கருவி வாங்குவதற்கும் 50% மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு ஐந்து நாட்கள் கோழிக்குஞ்சு பொறிப்பு மற்றும் கோழிவளர்ப்பு குறித்த பயிற்சி வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவர்களை அணுகி விண்ணப்பங்களை பெற்று 30.11.2020 தேதிக்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.**